**18.11.2022**

**OS.No. 188/2018 PW : 1, திரு. ராஜா**

**முதல் விசாரணை தொடர்ச்சி...**

16.11.2021 தேதியிட்ட அசல் அடமான கடன் திருப்பட்டதற்கான அசல் ரசீது வா.சா.ஆ.13. 19.05.2022 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.14.

**1, 3, 20 மற்றும் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

என்னுடைய சொந்த ஊர் பள்ளிபட்டிற்கு அருகே உள்ள டி.டி. கண்டிகை ஆகும். நான் நகரியில் குடியிருந்து வருகிறேன். 1, 2 பிரதிவாதிகள் என் உடன்பிறந்தவர்கள். என் சகோதரிகள் லட்சுமி, சாவித்திரி, கீதா மற்றும் சாந்தா அதில் சாந்தாவை தவிர மற்றவர்கள் காலமாகிவிட்டார்கள். 3ம் பிரதிவாதி சாவித்திரி என்பவரின் மகள். 3ம் பிரதிவாதியினா சரோஜா 1ம் பிரதிவாதியின் மகள். பாகம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு 1996 அல்லது 1997ல் திருமணமானது. வழக்கை தாக்கல் செய்தவற்கு முன்னர் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன். அதற்கு நான் தான் தகவல் சொன்னேன். அதற்கு 1ம் பிரதிவாதி ஒரு பதில் அறிவிப்பை அனுப்பினார் என்றும் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை 1983ம் வருடமும் என் தாயார் 2013ம் வருடம் காலமானார்கள். 1ம் பிரதிவாதிக்குஎப்போது திருமணமானது என்று கேட்டால் எனக்கு சுமார் 15, 16 வயதிருக்கும்போது அவருக்கு திருமணம் ஆனது. என் அப்பாவின் உடன்பிறந்தவர்களில் கோவிந்தசாமி காலமாகிவிட்டார். என் தந்தையின் மற்றொரு சகோதரரும் காலமாகிவிட்டார். அவர் பெயரும் தெரியாது. என் தந்தைக்கும் அவரது சகோரர்களுக்குமிடையே 1984ல் பாகம்

ஏற்பட்டது. 1ம் பிரதிவாதி எங்களுக்காக அந்த பாகத்தில் கலந்து கொண்டார். பதிவுசெய்யப்படாத ஒரு பாக ஆவணத்தின்மூலம் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பாகம் செய்து கொண்டார்கள். 2001ம் வருடம் வரை நானும் என் சகோதரர்களும் கூட்டுகுடும்பமாக இருந்தோம். என் அண்ணனான 2ம் பிரதிவாதி வி.ஏ.ஓ.வாக வேலை பார்த்தார். 1ம் பிரதிவாதி விவசாயம் செய்தார். வெற்றிலை கடையை நானும் அவரும் நடத்தினோம். 1982ம் வருடம் 2ம் பிரதிவாதி வி.ஏ.ஓ.வாக வேலைக்கு சேர்தாரா என்று கேட்டால் வருடம் தெரியாது. துர்கா பாய் 2ம் பிரதிவாதியின் முதல் மனைவி ஆவார். அவர் 2வது மனைவி என்றும் சொன்றால் சரியல்ல. எனக்கு தெரிய அவர் தான் முதல் மனைவி. 1ம் பிரதிவாதி 2 தடவை பஞ்சாயத்து தலைவராக இருந்தார். 2001ம் வருடத்திலிருந்நுது நாங்கள் தனித்தனி குடும்பமாக குடியிருந்து வருகிறோம். ஆனால் சொத்துக்களும் வியாபாரமும் பொதுவாக தான் இருக்கிறது. 2001க்கு பின்னர் 1ம் பிரதிவாதி தனியாக வெற்றிலை கடை நடத்தினார். நான் தனியாக ஆந்திராவில் ஒயின் ஷாப் நடத்தி வந்தேன். 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியாது. ஏ அட்டவனை சொத்து சர்வே எண்கள் மற்ம் அதன் அளவுகள் அது என்ன பாசனம் என்று எனக்கு தெரியாது. 2017ல் தான் வழக்கை தாக்கல் செய்தவற்கு வி.ஏ.ஓவிடமிருந்து சொத்து விவரங்களை வாங்கினேன். வி.ஏ.ஓ சொல்லிதான் சொத்து விவரங்கள் தெரியும். அதற்கு முன்பு சொத்து

விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. நான் ஊருக்கு சென்று பலவருடம் ஆகிவிட்டது.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.